
# வாசிகம்

## வாசிப்பு கலாச்சாரம் பற்றிய வரி – வழமங்கள்





சு . வில்வரெத்தினம்
(சுவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிகம்



சு.வில்வரெத்தினம்

வாசிப்பு கலாசாரம் பற்றிய
வரி - வடிமங்கள்

படைப்பாளிகள் உலக மீள்பதிப்பு மற்றும்
சூழலியல் மேம்பாட்டு அமைவனம்
(சூழகம்)
புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | வாசிகம் |
| நூலாசிரியர் | - | சு.வில்வரெத்தினம் (சுவி) |
| பதிப்பாசிரியர் | - | அ.வில்வரெத்தினம் குடும்பம் |
| வெளியீட்டாளர்கள் | - | படைப்பாளிகள் உலகமும், சூழலியல் மேம்பாட்டு அமைவனமும். |
| மொழி | - | தமிழ் |
| பதிப்பு | - | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு ஆண்டு | - | 2005 முதலாம் பதிப்பு<br>2021 இரண்டாம் பதிப்பு |
| எழுத்துரு அளவு | - | 13 |
| பக்கங்கள் | - | 86 |
| பிரதிகள் | - | 20.00 |

---

**இலவசமாக நூல்களைப் பெறுவதற்கான தொடர்பு :**

**T.P : 0777 168755**

**கருணாகரன் நாவலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

***சூழலியல் மேம்பாட்டு அமைவனமும்***
***படைப்பாளிகள் உலகமும் இணைந்து***
***நூலாசிரியர் அமரர் சு.வில்வரெத்தினம்***
***அவர்களின் "வாசீகம்" என்னும் இந்நூலை***
***வாசிப்பின் முக்கியத்துவம் உணர்ந்து***
***மின்பதிப்பு செய்து நூலாசிரியருக்கு***
***சமர்ப்பிக்கின்றோம்.***

மனமே தேனீயைப்போன்று எப்போதும்
நீ நல்லதையே நாடுவாயாக - குருதேவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன் எழுத்து

இது ஒரு கை விளக்கு
வாசிப்புப் பண்பாட்டிற்கான வழிதுலக்கும்
ஒரு சொல் விளக்கு
சொல்லக விளக்கு

வாசி என்ற சொல்லிற்குப் பொருள், இசைப் பாட்டு, இசைக்குழல், சுவாசம், இருப்பிடம் எனப் பலப்படுவதாக நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ் அகராதி தெரிவிக்கிறது.

வாசிகம் என்னும் இசைப்பாட்டிற்கு அபிநயம் செய்வது பரத நாட்டிய உலகில் மரபு. "வாசிகம் புவனம்" எனத் தொடங்கும் வடமொழி வாசிகப் பாவிற்கு முதன் முதலில் அபிநயம் செய்தே பரத நாட்டிய அளிக்கை தொடங்கும். பரதநாட்டிய மரபில் பரிச்சயமான வாசிகம் எனும் சொல் வாசிப்புப் பண்பாட்டிலும் பரிச்சயமானதே. வாசித்தல், வாசிப்பு, வாசிகசாலை என்பனவெல்லாம் வாசிகத்தோடு தொடர்புடையனவே. இவை ஒரு செய்தியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொள்வது, செய்தித் தாள்களின் வாசிப்புச் சாலை எனப் பொருள்படுவன. இதைவிட குழல் வாசித்தல், தவில் வாசித்தல், பறை வாசித்தல் எனவும் வாசித்தல் எனும் சொல் எமது பிரதேசங் களில் வழக்கில் இருந்து வருகிறது. வாக்கினூடா கப் புலப்படுத்தப்படும் சொற்கட்டுமானம் இத்தகைய வாத்தியக் கருவிகளின் ஊடாகவும் புலப்படும் தாளக்கட்டு, ஸ்வரக்கட்டு, சொற்கட்டு எல்லாம் உணர்வுத்தளத்தில் சொற்களைப் போட்டுருட்டும் கலை தான்.

வாசி என்பதற்கு சுவாசம் என்றும் பொருள். சுவாசம் என்பதற்குத் தமிழ்ச்சொல் மூச்சு, சும்மா மூச்சல்ல, உயிர்மூச்சு. மூச்சில்லாவிட்டால் பேச்சில்லை மூச்சுப் பேச்சற்றுக் கிடக்கிறான் என்றால், ஏறக்குறைய செத்துப்போய் கிடத்தல்தான், இன்றைய எமது பண்பாட்டுக் காவுகைக்கும், பரம்பலுக்கும் மூச்சாயிருப்பது வாசிப்பு. கவிதை, நாவல், சிறுகதை எனப் பல்வேறு இலக்கிய வகைமைகளுக்கும், புதிய வடிவப் பரிசோதனைகளுக்கும், பல்வேறு அறிவுத் துறைசார் ஈடுபாட்டிற்கும், அவற்றின் மீதான வாசிப்பின் பயன் பேறாக உருவாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை வளர்ச்சிக்கும், அறிவியல் கலைப் பார்வைகள் இணைந்த பண்பாட்டு வளர்ச்சிக்கும் மூச்சாயிருப்பதும் வாசிப்புப் பண்பாடு தான்.

வாசிப்புப் பண்பாடு மூச்சோடில்லாவிட்டால் எமது கலாசாரம் செத்தகலாசாரமாகி விடும். எந்தக் கலாசாரமும் செத்துவிடக்கூடாது.

ஏனெனில் இன்னொரு கலாசாரத்தை உருவாக்க, உயிர்ப்புறச் செய்ய, வாழும் பிற கலாசாரம் ஊட்டம் தரும். இல்லாவிட்டால் சிறந்த சிந்தனைகள் வலம் வராமல் செத்தவீட்டுச் சடங்குத் தனம் தான் வலம் வரும்.

பள்ளி மாணவர், பல்கலைக்கழக மாணவர், இளைய பரம்பரையினர், பல்துறைசார் தொழிற் துறையினர் எனப் பல தரத்தவரையும் அவரவர் துறைசார்ந்தும், அதற்கும் அப்பாலான கலை, பண்பாட்டு, இலக்கிய, அறிவுத்துறை ஈடுபாடு கொள்ள வைக்கும் தூண்டற் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம். இதற்கு முன்னோடியாக, அருகி வரும் வாசிப்புச் சூழலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்புப் பண்பாட்டை உருவாக்குவதற்கான முன் முயற்சிகளில் இதுவும் ஒரு முயல்பு.

நல்ல இதழியற் சூழல், நல்ல புத்தக வாசிப்புச் சூழல், நல்லிலக்கிய ஆக்கச்சூழல் எல்லாவற்றிலும் இருளின் நிழல் படிந்து வருகிறது. இதை விலக்கித் துலக்கிடச் செய்யும் துணையாகவும், தூண்டி யாகவும் இந்த சொல்லக விளக்கு முன் எழுகிறது. கவிதைப்பாங்கும் இழையோட, புதிய பரிசோதனை களினதும் கலவை வார்ப்பாக இப்படைப்பு உள்ளதால் இதனை வரிவடிமங்கள் என்றழைக் கின்றேன். புதியசொல் வார்ப்புகள்தான் இந்த வடிமங்கள், வாசிப்புக் கலாசாரத்திற்கான வடிமம், வாசக ஈர்ப்பும், பதிவும், பரவுகையும் வேண்டி உங்கள் முன் விரிகிறது. வாசிப்புக் கலாசாரம் என்ற சொல்லின் சுருக்கமான வாசகமே வாசிகம். வாசியுங்கள்.

**விஜயதசமி** **சு. வில்வரெத்தினம்**
**2005** புங்குடுதீவு
(திருகோணமலை)

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

கைப்பேசிகளின் பெருக்கத்தால் நாங்கள் இழந்தது சிட்டுக்குருவிகளை மட்டுமல்ல வாசிப்பையும்தான். சமூக ஊடகங்களின் பெருக்கம் மற்றும் கைபேசி செயலிகளின்- அப்ளிகேஷன்களின் பெருக்கம் என்பவற்றின் கூட்டு விளைவாக கைபேசி ஒரு வாசிப்பு வெளியாக மாறிவிட்டது. ஆனால் அது ஒரு சிறிய பரப்பு. அதில் தொடர்ந்து வாசிக்க முடியாது. ஆழமாக வாசிப்பது என்றால் தொடர்ச்சியாகவும் நீண்டநேரத்துக்கும் வாசிக்க வேண்டும். ஆனால் கைபேசியில் வாசிப்பது கண்ணுக்கும் வேதனை மனதுக்கும் வேதனை. எனவே கைபேசி ஊடாக வாசிப்பது என்பது ஆழமான வாசிப்புக்கும் நீண்ட வாசிப்புக்கும் அடிப்படையான வரையறைகளைக் கொண்டிருக்கும். கைபேசி செயலிகளின் பெருக்கத்தால் அதிகரித்துவரும் வாசிப்புப் பழக்கம் எனப்படுவது பெருமளவுக்கு மேலோட்டமானதாகவும் நுனிப்புல் மேய்ச்சலாகவுமே காணப்படுகிறது.

போதாக்குறைக்கு யூடியூப்பின் பெருக்கத்தோடு வாசிப்பதை விடவும் கேட்பதும் பார்ப்பதும் இலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவை ஆகிவிட்டன. வாசிப்போடு ஒப்பிடுகையில் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் அதிகம் பிரயத்தனைப்படத் தேவையில்லை. இதனால் கேட்கவும் பார்க்கவும் விரும்புவோர் தொகை அதிகரிக்கிறது. இதுவும் ஒரு விதத்தில் ஆழமானதும் நீண்டதுமான வாசிப்பைப் பாதிக்கின்றது. மிகக் குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளிலும் பெருந் தொற்றுநோய் காரணமாக சமூகமுடக்கத்தின்போது முடங்கிக் கிடந்த மனிதர்கள் அதிகமதிகம் இலத்திரனியல் கருவிகளோடு மினக்கெட்டார்கள். இதுவும் ஆழமான வாசிப்பை ஊக்குவித்ததா? என்ற கேள்வி உண்டு. ஏனெனில் அப்ளிகேஷன்களின் உலகம் என்பது மனிதர்களை அதிகபட்சம் பொழுதுபோக்கிகளாக மாற்றிவிட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த சந்தர்ப்பங்களில் ஆழமாக வாசித்தவர்கள் அல்லது ஆழமானதை வாசித்தவர்கள் எத்தனை பேர்?

சு.வில்வரத்தினத்தின் இந்த நூல் வாசிப்புப் பழக்கத்தைப் பற்றியது. கைபேசிச் செயலிகளின் பெருக்கத்துக்கு முந்திய ஒரு காலகட்டத்தில் எழுதப்பட்டது. மனிதர்கள் இப்பொழுது முன்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையும்விட அப்ளிகேஷன்களின் கைதிகள் ஆகிவிட்டார்கள். அதாவது அதிகரித்த அளவில் பொழுதுபோக்கிகள் ஆகிவிட்டார்கள். வில்வரத்தினம் வாசிப்பு ஒரு பொழுதுபோக்கா? என்று கேட்கிறார். ஆனால் நம்மில் பலருக்கு அது பொழுதுபோக் காகத்தான் இருக்கிறது. மிகச் சிலருக்கே அது அடுத்தகட்ட அறிவுக் கூர்ப்புக்கான தயாரிப்பாக இருக்கிறது.

இப்படிப்பட்டதோர் தொழில்நுட்பச் சூழலில் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை வரலாற்றுத் தொடர்ச்சி, அனுபவத் தொடர்ச்சி தலைமுறைகளுக்கு இடையிலான அனுபவப்பகிர்வு போன்ற எல்லா வற்றிலுமே இணைப்புக்கள் அறுக்கப்பட்டக் காண்கிறோம். ஒருபகுதி இளையோர் தன் வரலாறு தெரியாமலும் அல்லது தன் வரலாற்றை திரித்துக் கூறும் சக்திகளின் பின் இழுபட்டுச் செல்வோராகவும் மாறிவிட்டார்கள்.

எரிக்கப்பட்ட யாழ் நூலகத்தை ஆண்டு தோறும் நினைவுகூரும் மக்கள் நாங்கள். எரிக்கப் பட்ட நூலகத்துக்கு பதிலாக எரிக்கப்பட முடியாத ஒரு மெய்நிகர் நூலகத்தை வெற்றிகரமாக கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெழுப்பியிருக்கும் மக்களும் நாங்கள். எரிக்கப் பட்ட நூலகத்தை அதன் மெய்யான பொருளில் நினைவு கூர்வது எப்படி?

சமூகத்தில் வாசிப்பை ஒரு கலாச்சாரமாக வாழ்க்கை முறையாக மாற்றுவதுதான். ஊர்கள் தோறும் வாசிகசாலைகளைக் கட்டியெழுப்புவோம். வீடுகள் தோறும் குட்டி குட்டி நூலகங்களை கட்டி யெழுப்புவோம். சமூகத்தின் எல்லாத் தளங்களிலும் வாசிப்பு வட்டங்களை உருவாக்குவோம். பரிசுகளாக நூல்களை வழங்குவோம். வீடுகளில் கேபிள் தொலைக்காட்சிகளின் முன்னே நேரத்தை செலவழிப்போர் அதில் ஒரு பகுதி நேரத்தை வாசிப்புக்குச் செலவழிப்போம். அதன்மூலம் இளைய தலைமுறைக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவோம். சிந்திக்காமல் வாசிப்பதும் முழுமையற்றது. வாசிக்காமல் சிந்திப்பதும் முழுமையற்றது. வாசிப்போம் சிந்திப்போம் தேசத்தை கட்டியெழுப்புவோம்.

**நிலாந்தன்**
எழுத்தாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

"வாசிகம் பணி சிறக்க வாழ்த்துக்கள்

வாசிப்பின் பெருமைகளை பேசுகின்ற வாசிகம் நூல் காலத்தின் தேவையறிந்து மீள்பதிப்பு செய்யப் படுவது மிகச் சிறந்த மகிழ்ச்சி மிக்கதொன்றாகும்.

மனித பரிமானம் தொடங்கி வாசிப்பு பழக்கம் மனிதர்களிடையே தொடங்கியதன் பின்பு மனித திறன் விருத்தியில் வாசிப்பு பழக்கம் இன்றியமை யாததாகக் காணப்படுவதனூடாக மனித சிந்தனை வளர்ச்சியில் பாரிய பங்களிப்பினை பதிவு செய்து வருகின்றது.

தற்போது விஞ்ஞான யுகத்தில் விடியோக்கள், மெய்நிகர் விளையாட்டுகள் மற்றும் திறன்பேசிகளின் பயன்பாட்டின் ஊடாக மக்களின் வாசிப்பு பழக்கம் குறைவடைந்துள்ள போதிலும் வாசிப்பின் மீது பற்றுக்கொண்ட குழுக்களினால் இலத்திணியல் நூலகங்கள் உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் காலத்தின் தேவையறிந்து மீள்பதிப்பு செய்யப்படுகின்ற வாசிகம் நூல் சமூகத்தின் இடைவெளிகளை நிரப்பி வாசிப்பு பழக்கத்தினை வளர்த்தெடுக்கும் என்பதில் ஐயம் இல்லை. எனவே "வாசிகம்" தனது பணியினைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இளங்கோவன்**
செயலாளர்
கல்வி அமைச்சு
வடக்கு மாகாணம்

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

***எமது மண்ணின் இலக்கியச் சிந்தனைச் சொத்துக்களில் திரு.சு வில்வரத்தினம் அவர்கள் மறக்கவும், தவிர்க்கவும் முடியாதவர்.***

"நாட்டுப்பற்றாளர்" என போற்றப்பட்ட திரு.சு.வி. அவர்கள் நிறைய கவிதைகளும், இலக்கிய இதழ்களும் படைத்தவர். அவற்றை பாடலாகப் பாடும் வல்லமையும் பெற்றவர்.

எமது மண்ணிற்கு பெருமை சேர்த்த இவரது 15 வது நினைவுப் பறைசாற்றலுக்கு, ஈழ இலக்கிய உலகிற்கு பலம் சேர்க்கும் "படைப்பாளிகள் உலகம்" சிறு அணிலாக சேர்ந்து நிற்பதில் பெருமை கொள்கின்றது.

"வாசிகம்" எனும் அவரது படைப்புகளில் ஒன்றையும் இந்த நாளில் புதுப்பித்து மீள்வெளியீடு செய்து கொடுப்பது மன நிறைவைத் தருகின்றது.

எம்மவர் திறமைகளை கொண்டாடுவோம்.

**ஐங்கரன் கதிர்காமநாதன்**
நிறுவுநர்
"படைப்பாளிகள் உலகம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமானவை யாக்கிறது. ஆதலால்த்தான், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்கிறாள் ஔவைமூதாட்டி.

வாசிப்பின் மகத்துவம் அறிந்த எனது சிறிய தந்தையாரும் ஈழ இலக்கிய உலகின் மறக்க முடியாத பல்துறை வித்தகனும் சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் உருவாக்குறவருமாகிய அமரர் சு.வில்வரெத்தினம் அவர்கள் "வாசிகம்" என்ற நூலை எழுதியுள்ளார். அவது எண்ணங்களை இன்றைய இளம் தலைமுறைனரிடம் சேர்க்கும் முகமாக மீள்பதிப்பு செய்வதில் பெருமை அடைவ தோடு, இந்த நூலினை இலவசமாக நூலகங்களுக்கு நாடு முழுவதும் கொண்டு சேர்ப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

**கருணாகரன் நாவலன்**
செயலாளர்,
சூழலியல் மேம்பாட்டு அமைவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.வி என்னும் பெருங் கவிஞர்!

சு.வி என்ற பெயரால் அறியப்படுபவர் கவிஞர் சு.வில்வரெத்தினம் அவர்கள். 1950இல் யாழ். புங்குடுதீவில் பிறந்தவர். 1970 களிலே எழுத ஆரம்பித்து 1980 களில் முக்கியமான எழுத்தாளராகப் பரிணமித்தவர். இலக்கிய உலகிற்கு அவர் வழங்கிய ஒப்பற்ற பங்களிப்புக்காக நாட்டுப் பற்றாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

கவிஞர் சு.வில்வரெத்தினம் அவர்கள் இந்நூலில் எழுதிய எழுத்துகள் அனைத்தும் வாசிப்புப் பற்றியதே. நூலின் 18வது பக்கத்தில் "நல்லதை நாடுதல்" எனத் தொடங்கி 84வது பக்கத்திலே "பின் வாசிப்பு" என்ற தலைப்போடு முடித்திருக்கிறார். பின் வாசிபு என்பது, வாசிப்பின் பின்னரான விடயமா அல்லது வாசிப்புக்குப் பின்னர் சிந்திக்க வேண்டிய விடயமா? என்பதை வாசகர்களே தீர்மானிக்க வேண்டும்.

வாசிப்புப் பண்பாட்டை வளப்படுத்துகின்ற நோக்கில் கவிஞர் சு. வில்வரெத்தினம் அவர்களின் படைப்பான "வாசிகம்" என்ற நூலை மீள்பதிப்புச் செய்திருக்கின்ற "சூழகம்" அமைப்புக்கு எனது பாராட்டுகள்.

**கணபதி சர்வானந்தா**

எழுத்தாளர், சுதந்திர ஊடகவியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

| | |
|---|---|
| முன் எழுத்து | |
| 01. நல்லதை நாடுதல் | 18 |
| 02.நல்ல புத்தகங்கள் நல்ல நண்பர்கள் | 20 |
| 03.புரட்டிப் பார்க்கப்படாத புத்தகம் | 22 |
| 04.புத்தகமும் புது நூறு கிளிகளும் | 25 |
| 05.வாசகத் தகுதி | 27 |
| 06.ஒரு பூவின் நோக்காடு | 30 |
| 07.புது வாசகம் | 33 |
| 08.பயிலரங்கு | 36 |
| 09.வாசிப்புப் பண்பாடும் பண்பட்ட வாசிப்பும் | 39 |
| 10.அறிவுத் தீ கொளுத்துவோம் | 42 |
| 11. எதையும் வெல்லும் பேரறிவு | 44 |
| 12. வாசிப்பென்னும் வளர்கலை | 48 |
| 13. உள்ளக வாசிப்பு | 51 |
| 14. பெரும் காவுகை | 54 |
| 15. இனியது மீட்டல் | 57 |
| 16. புதிய உள் நுழைவு | 60 |
| 17. புத்தகம் காட்டி | 65 |
| 18. அறிவும் கலையும் யோகமாக | 68 |
| 19. கவிதை நடை நடந்து | 71 |
| 20.முதிசம் அல்லது முதும் மொழி | 75 |
| 21.மெய்யறிவு | 78 |
| 22.விடுதலை வாசகம் | 81 |
| பின்வாசிப்பு | 84 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதை நாடுதல்

இது வசந்த காலம்
புது நூறு மலர்வுகளின் திருவிழாக் காலம்
தேனீக்களின் கொங்குதேர் வாழ்க்கை
ஆரம்பமாயிற்று
'நறியவும் உளவோ'
புலனறியும் தேனீயை தேடல்காரத் தேனீக்கள்
கேட்டன
கோட்பாடுகளின் காமஞ்செப்பாத
அழகியதும்பி சொன்னது
'நறியவும் உளவே நானறியும் பூவில்'
உடல் மொழியால் நடனிததும் காட்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனீக்கள் புரிந்து கொண்டன
தேன்நுகரும் தேடல் தொடங்கின

புத்தம் புதுநூறு மலர்வுகள்
வாவென்று அழைத்தன தேனொழுக
புதுத்தேன் வாசம்
சித்தம் அழகியார் போலச் சிறைவண்டுகள்
ஆர்த்தன ஒரு புறம்
தேன் சிட்டுகள் அலகுகளில் தேன்தோய்த்து
பாடின மறுபுறம்
இத்தனைக்குள்ளும் தேனீக்களின்
ரீங்காமோ தனிரகம்.

தேடல், திரட்டல், தேறல்
தேறியதைப் பேணுதல்
தேன்கூட்டுச் சீவியம்: தேனகத்திருத்தல்
தேனினிமைகளின் சாரத்தைப் பேணி
நிலாக்காலத்தில் நுகரும் தனியழகு
நல்லதையே நாடி, தேடி, திரட்டிப்
பலரோடும் நல்லதையே பகிர்ந்துண்ணும் பண்பாடு
நமது தேடலும் பகிர்வும் அதுவாகுக.

25.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல புத்தகங்கள்
# நல்ல நண்பர்கள்

'நீ எதை வாசிக்கிறாய் என்றெனக்குச் சொல்வாயா?'

'எதையும் வாசிப்பேன்'

'எதையும் என்றால்?'

'கையில் அகப்பட்ட எதையும்'

'தேர்ந்து வாசிக்கும் பழக்கம் இல்லையா?'

'நேரத்தைப் போக்கத்தான் வாசிப்பேன்
இதில் தேர்விற்கு ஏது இடம்?'

'உனக்கொரு ஷேர்ட் வாங்கும் போது தேடித்
தேர்ந்து வாங்குவது இல்லையா?'

'காசு கொடுக்கிறவன் தேர்ந்து தானே
வாங்கவேணும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்லது ஒரு மணிக்கூடு வாங்கும் போது?'
'அதிலும் அழகும் தரமும் முக்கியந்தானே?'
'உனக்கொரு வாழ்க்கைத்துணை எப்படி
அமைய வேண்டும்'
'அழகாய் இனிய குணம் உடையவளாய்... இப்படி
நீடித்துக் கொண்டே போகலாம்'

'நல்லது ஒரு நண்பன் அமையும் போது...?'
'நல்ல நண்பர்கள் தானே உற்ற துணை'
'அவர்களின் துணை இல்லாத போது...'
'புத்தகங்களை நாடுவேன்'
'அப்படியென்றால் நல்ல நண்பர்களைப் போல
நல்ல புத்தகங்களை ஏன் நாடக்கூடாது?'
'புத்தகங்கள் பொழுதைப் போக்கத்தானே?'
'நண்பர்களும் சும்மா பொழுதைப்
போக்கத்தானோ?....'

'ஏன் மௌனம் நண்பனே!
இந்த, மௌனம் நல்ல தொடக்கப் புள்ளியாகட்டும்
நல்ல புத்தகங்களை தேடி வாசி!
அவை
உனக்கு நல்ல நண்பர்களாய் அமையும்.

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டிப் பார்க்கப்படாத புத்தகம்

புரட்டிப் பார்க்கப்படாததாய் கிடந்தது ஒரு புத்தகம்.
மேசையில் ஒழுங்காய் அதனை வைத்தபடி
கேட்டேன் நண்பனை 'புத்தகம் புதுசோ?'
'எழுத்தாள நண்பன் ஒருவனின் வெளியீட்டு
விழாவில் வாங்கியது' என்றான் நண்பன்.
'வாசிச்சாச்சோ?'
'வாசிக்க எங்கடாப்பா நேரம்? ரியூஷன் குடுக்கவே
நேரம் பத்தாது'
'வாசிச்சாச்சோ என்றொரு கதையைச் சுட்டி
நண்பன்
கேட்டால் என்ன சொல்லுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்லாயிருந்ததெண்டு சொல்ல வேண்டியதுதான்'
'நண்பன் யார்'
'அவன் தான் நந்தன் தாஸ்'
'அது தெரியுது சிலவேளை புனை பெயரோ என்று தான்...'
'சாய்ச்சா அது தான் அவனின் சொந்தப் பேர்'
'நீண்ட கால நண்பனோ?'
'கொஞ்சக் காலந்தான் : ஆனா நல்ல நெருக்கம் : தூரத்துச் சொந்தம் என்பதும் இப்ப தான் தெரியும்'
'அப்ப அவன்ர குடும்ப வைபவங்களுக்கும் போய் வருவாய்'
'ஓமோம் : அவனின் உள் வீட்டுச் சங்கதிகளும் இப்ப எனக்கொரு திறந்த புத்தகம் போல'
'ஆனால் அவன் எழுதின புத்தகத்தை மட்டும் திறந்தது இல்லை'
'என்ன நக்கலா'
'இல்லையெடாப்பா ஒருவனின்
உள் வீட்டுச் சங்கதிகள் தெரியிறது சந்தோஷம் தான். அவனின் உள்ளத்து உணர்வுகளைச் சொல்லுகிற புத்தகத்தை வாசிக்க என்ன தயக்கம்'
'எட அப்பிடி ஒரு பக்கமும் இருக்கும் :
என்னடாப்பா? 'அது எல்லாருக்கும் இருக்கு :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரவர் தனித்தனி அனுபவ உலகம் : அதை
அவன் எழுதுகிறான் : நாங்கள்
வாசிக்கிறதில்லை'
'ஓமடாப்பா'
'இனியாவது புரட்டிப் பார்!
இன்னும்மோர் உலகம் தென்படும்'

25.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகமும்
# புதுநூறு கிளிகளும்

வாசித்துக் கொண்டிருக்கிறாள் புத்தகம்
பார்த்துக் கொண்டிருக்கிறேன் நாள் பௌவியமாய்
வரிக்குவரி ஊர்கின்ற விழிகள்
வாசிக்கின்றனவா?
புத்தகவாசம் முகர்கின்றனவா?

அற்புத வரிகள் போலும்
விற்புருவங்கள் வியப்புற்று நிமிர்கின்றன!
சொற்களிடை ஒளிப்பாய்வா
சோதியாய் அவள் விழிகளில் மின்னிடுகின்றது?
கூந்தலின் நெளி நெளி வரிகளில் விரல்கோதி
காற்று எதனழகை வாசிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியில் புரளும் நெளி முடியை
அவள் நீவி ஒதுக்குகையில்
புத்தகத்தின் மேல்
பூங்கொம்பிலிருந்தொரு பூ உதிர்கிறது
புதியதொரு சுடர்க்கருத்தை கண்டெடுத்தாள் போல
தன் கைம்மலரால் உச்சியிலே
சூடிக் கொள்கிறாள் அச்சுடர்க்கொடி.
உச்சியிலே மலர்ந்த பூவில்
எனது விழி வண்டுகள் ஊர்கின்றன
வெளியுலகின் குறுக்கீடு எதுவுமற்ற
தனித்தனி ஓட்டங்களின் தானறியாச் சங்கமிப்பில்
கிளை நதிகள் ஊடறுத்தனவோ?
கலகலத்தாள்: காதற் தீவலைகள் தெறித்தன
தீண்டிற்று அவள் பார்வை.
கண்ணொற்றும் மின் வீச்சிலெனை
வாசித்துத் தலை புதைத்தாள்
சுற்றுச் சூழலெங்கும் நாணவெள்ளம்
நனிபெருகியொரு காடு முளைக்க
புத்தகத்திலிருந்து சிறகு முளைத்து
புதுநூறு கிளிகள் பறந்தனவே

25.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகத் தகுதி

இளந்தென்றல்! நீ என் இனிய வாசகி.
புத்தகங்கள் கேட்பாய் : தருவேன்
திருப்பித்தரும் போதிலோ உன் திருவாய் மலராய்
வார்த்தை முத்துக்கள் கொட்டுண்டால் எனும்
வழிப்பயம் காரணமோ?
'புத்தகம் எப்படி' என்றால் 'நல்லம்'
என்ற ஒற்றை வார்த்தைதான்.
நல்லவைதான் நான் உனக்குத் தருபவை
என்றாலும் ஏனின்னும் ஓர் இளநிலை விமர்சகம்
இதழ்மலர்வதில்லை உன்னிடம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம் பழகு

தென்றலாயிருப்பது அழகுதான் : தீண்டும்
புரிந்துணர்வில் அரும்புகளை கண் மலரச்
செய்வது தான்
ஆனாலும் சூடடிப்புச் செய்தபின்னர் பதர் நீக்கி
நெல்மணிகள் தேறுதற்கு தூற்றுதல் எனும்
தொழிற்பாடும் வேண்டுமன்றோ! காற்றதற்குச்
சற்றதிகம் வேண்டும்.
விமர்சனமும் அது போலவே தான் பதர் நீக்கித்
தூற்றுகிற செயற்பாடே தான் : தேறாதவற்றை வீச
ஒதுக்குதற்கு விமர்சனம் காற்றின் வீச்சைப்போல்
வேண்டும்.

வாசகவிழிப்பு நிலை புத்தகப் பதர்களைப்
புறமொதுக்கும்
போலி எழுத்துகளைக் கடிதோச்சி சிரமறுக்கும்
ஆதலால் வாசிப்பும் வேண்டும்:
விமர்சனப் பார்வையும் வேண்டும்
இதுவே வாசகவிழிப்பு நிலை

பல நூறாக வாசித்துத் தள்ளுதல் அல்ல வாசிப்பு.
தக்கவற்றில் கொள் முதல் செய்ததென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதித் தள்ளியவை எவை ஏனென்ற
தன்நிலை விளக்கத் தகைமைதான்
தக்கவாசகி என்றுன்னை நிலை நிறுத்தும்
புத்தகங்களை திருப்பித்தரும் போதிலினி உந்தன்
புன்னகையும் ஒற்றைச் சொல்லும் மட்டும்போதா,
சிந்தனையில் பொறி தட்டிய கணங்களையும்
தென்றல் தீண்டிய சிலிர்ப்புக்களையும்
தீக்குளித்த அனுபவத்தையும் எனக்குத் தெரிவி
ஏனில்லை படைப்பில் உயிர் மணிகள்
என்பதையும் பக்குவமாய் எடுத்துரைத்தல் பழகு
இவை தகுதி நல்ல வாசகர்க்கே.

26.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பூவின்
## நோக்காடு

ஆக்க இலக்கியகலைத்திறன் அமர்வு நிகழ்ந்தது
இளைஞர் யுவதிகள் ஐம்பது பேர் இருந்தார்
ஆள் அறிமுகங்கள் நிகழ்ந்ததன் பின்னர்
நூல் அறிமுகங்கள் உண்டா என உசாவினேன்

இறுகுதிர்ந்த மௌனம் அமர்வின்வெளியை
அரித்து தின்னத் தொடங்கியது

பூவின் நோக்காட்டுப் புன்னகை உதிர்த்தபடி
ஓர் இளைஞனைக்கேட்டேன்
'கவிதைத் தொகுதி ஏதும் வாசித்தது உண்டா'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையெனும் பாங்கில் தலையசைத்தான்
இளைஞன் வார்த்தைகள்
தொண்டைக்குழியினுள் வற்றிப்போக.
'நீங்கள் சிறுகதைதொகுதியேதும்
வாசித்ததுண்டா'
இதழ்கள் மூடியபடி இல்லையென்றாள் யுவதி.
இன்னுமொருபிள்ளையை உசாவினேன்
'ஒரு நாவலேனும்................'
பேசாதிருந்தாள் வார்த்தைக்கே நோகுமென்றோ?
ஈற்றில்,
எனக்கே முக்காடிட்டபடிதான் வெளியே
போகவேணும் போல் பிடுங்கித்தின்றது வெட்கம்
முன்னாலிருந்த முகக்காடுகளில்
ஓர் இலையும் அசையவில்லை
இதழ்கள் பூக்கவில்லை
இளந்தளிர் முனையும் ஆடவில்லை
வெட்கம் என்னுள் மேலும் கிழங்கு விழுத்தாமல்
பிடுங்கியெறிந்துவிட்டு அமர்வு தொடங்கினேன்.

கவிதைச்சுவை நனி சொட்டியதாச் சொன்னார்
சிற்றுண்டி பரிமாறிய நண்பர்.
அவருக்கு 'நன்றி' எனச்சொல்லி நகர்ந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள்

சிறுகதை அமர்விற்கு வரவிருந்த எழுத்தாள

நண்பரிடம் முற்கூட்டியே சொல்லி வைத்தேன்

'சிறுகதைத்' தொகுதியேதும்

வாசித்ததுண்டாவென

கேட்டுவிட வேண்டாம்.'

வாடிவிழுமே பல அனிச்சம் பூக்கள்.

26.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவாசகம்

நீ கவிஞனா?
தெரியாது
நீ எழுத்தாளனா?
தெரியாது
கவிதைகள் எழுதுவதாய்ச் சொல்கிறார்களே
சொல்கிறார்கள்
கட்டுரைகள் எழுதுவதாய் சொல்கிறார்களே
சொல்கிறார்கள்
நீ என்ன சொல்கிறாய்?
நானோர் வாசகன்!
தீவிர வாசகனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிய வாசகன்
சீரியம் என்றால்?
சீர்குலையாச் சமலயம்
சமன்செய்து சீர்தூக்கலா?
அப்படியேதான்
நல்லதையும் கெட்டதையும் சமன் செய்வதா?
அல்ல, தராசிலிட்டு மதிப்பிட்டு
மிகைநாடி மிக்க கொளல்
நல்லதே போலும் கெட்டதும் உள்ளதே
அதைக் கண்டு கொள்வதே சீரியம்
சீரிய வாசகனாய் இருப்பதன் பயன்?
சீரிய நோக்கு
நிலை சித்திக்கும்.

நோக்கெனப்படுவது?
நோக்குதற்கான காரணத்தை நிறுவி
ஒரு படைப்பின் முழுமையைக் கண்டறிவது
அதை எப்படி அழைக்கலாம்?
அதுதான் விமர்சனம்
சுயவிமர்சனம் செய்வதுண்டா?
சுயவிமர்சனம் செய்பவன்தான் படைப்பாளி
நீங்கள் படைப்பாளி என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துக்கொள்கிறீர்கள்?
சுயவிமர்சனம் செய்பவன் மட்டும் தான்
உன்னதமான படைப்பாளி என்கிறேன்!
என்றால்?
தன்னை விசாரணை செய்யும் தகைமைதான்
தன்னொளிரும் சுயத்தைக் கண்டடையும்
அதாவது?
அதாவது தன்னைப் புதிது படைக்கும்

26.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிலரங்கு

பாட்டிமார் கதை சொன்ன காலம் போய்விட்டது;
பாட்டன்மார் சொல்லிய பழமரபுகளும்
போய்விட்டன.
பாவம் பேரன் பேத்திமார்
நிலாச்சோறோடு கதைகளும் கவிதைகளும் சேர
உண்ட தங்கள் தாய்மாரும் தந்தையரும்
கொடுத்து வைத்தவர்களென ஏங்குகிற காலமாச்சு.

பாட்டிக் கதை கேட்கும் காலம் போனாலும்
வாசிக்கும் மரபு வளம் பேணினோமா?
கட்டுக்கட்டாகப் புத்தகங்கள் சுமக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிப்பான சுவையா அவை?
இல்லை அத்தனையும் கசப்புகள்
புசிப்பதற்கு ஏற்றவை அவையென்று எவ்வளவு
புழுகினாலும் இனிப்புக்கள் தான் வாழும்
திணிப்புகள் இயல்பான வளர்ச்சியைக் கொல்லும்
பிள்ளைகளின் இயலறிவைத் தின்னும்

தயவுசெய்து பிள்ளைகளின் தொண்டைக்
குழியைக் காப்பாற்றுங்கள்
அவர்களுக்கு இனிப்பது எதுவென்பதை
அவர்களே அறிவர்.
வழி நடத்துவது தேவை தான்
அதற்காக கால் விலங்குகள் போட்டுவிட்டா
நடவென்று சொல்வது
பிள்ளைகளின் தன்னறிவு வளர வழிவிடுவோம்
நல்லவற்றை வாசிக்கக் கொடுப்போம்
பள்ளிக் கூடங்கள் தோறும் நூலகம் எதற்கு?
புதிய அதிபர் இடமாற்றம் பெற்றுவரும் போதில்
புத்தகங்களை கசங்காமல் கையளிப்பதற்கா?
அறிவுடைய பிள்ளைகளை அனைத்துக்கலை
வல்லவராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்திற்கு கையளிக்கும் செயற்பாடுகள் வேண்டும்
நூலகத்தை மாணவர்க்கு திறந்து வைப்போம்
நுண்ணறிவும், கலைகளும் பயிலரங்குகள் செய்வோம்.

27.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்புப் பண்பாடும்
# பண்பட்ட வாசிப்பும்

வாசிப்புப் பண்பாடு என்றொன்று இருக்கிறது பண்பட்ட வாசிப்பு என்பது இன்னொன்று. வாசிப்புப் பண்பாடு என்பது நாளிதழ்கள், பருவகால இதழ்கள் எனத் தொடர்ந்து நூல்களை வாசித்தலின் விட்டு விடாத தொடர்ச்சி. பண்பட்ட வாசிப்பு என்பது தேர்ந்த வாசிப்பு, பல்துறை சார்ந்த வாசிப்புகளின் பயன் பேறால் பரந்த சிந்தனைத் தளத்துக்கு படிக்கட்டுகள் அமைப்பது.

பண்பட்ட வாசிப்பிற்கு துறை வேறுபாடுகள் இல்லை. கவிதை பிடிக்கும், சிறுகதை பிடிக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இலக்கிய வகைமைகளுள் பேதம் இல்லை. எல்லா வற்றிலும் பயன் நுகர்வது. இனிய ரசனை உடையது. வாசகநிலை அனுபவத்தில் அதிர்வு களை உணர்வது. அவை தரும் பரவசங்களை தன்னனுபவப் பட்டறையில் தராசிட்டு மதிப்பிடுவது கவிதைக்குள்ளிருக்கும் சிறுகதையை அது அடையாளம் காணும், சிறுகதையுள் இருக்கும் கவிதானுபவத்தைக் கறந்தெடுக்கும். ஒன்றனுக் கொன்று ஊடுபாய நின்ற கலையழகை அனுபவிக் கும். கலை, அறிவியல் என்ற மேலெழுந்தவாரியான பகுப்பு முறையை மனதிலே கொள்ளாது. கலை யானது அறிவியலின் பார்வைக் கூர்மையோடு அமைய வேண்டியதையும், அறிவியலானது கலாபூர்வமான தெளிவோடு கையாளப்படுவதையும் கவனத்தில் எடுக்கும். வாசகநிலை பரவச அனுபவம் எய்துதல் என்பதையும் தாண்டி வாழ்வியலின் தரிசனமாக மாறுவதற்குரிய எழுத்துக்களை நேசிக்கும் : தேடி வாசிக்கும் தேர்ந்து சிந்தித்து தெளியும் கலையும் அறிவும் இணையும் மெய்தளத்தைக் கண்டுபிடிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிப்புச் செய்தல் என்பது தன்னைக் கண்டடைதல், தான் சார்ந்த சமூக நிலையின் யதார்த்தத்தைக் கண்டடைதல், கண்டடைந்த வற்றை, சமூகங்களிடம் பரிமாறுகின்ற சற்பாத்திரமாக தன்னை மாற்றுதல் என்ற செயற்பாடுகள் வாசக நிலை எய்த வேண்டிய வளர்நிலைகள், இந்த வளர்ச்சிக்கு உகந்த வாய்க்கால்களாக வாசக வட்டங்களை அமைத்து, பரந்த வாசிப்புத் தளத்தை உருவாக்குதல் பண்பட்ட வாசகர்களின் மாறாத கடமைகளாகும். தமது சமூகத்தின் வாழ்வியலை தன் விடுதலை எய்தும் பரிமாணத்திற்கு உயர்த்துதல் பண்பட்ட வாசக மனங்கள் நிகழ்த்த வேண்டிய நெடிய பயணமாகும். நிகழ்த்துவோமாக.!

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுத்தீ
# கொளுத்துவோம்

யாழ் நூலகம் எரிக்கப்பட்டு தணலவியாமல் இன்னும் தகித்துக் கொண்டிருந்த ஒரு நாளில் நானும் நண்பன் புஷ்பராஜனும் நின்றிருந்தோம் பேச்சிழந்து வெறுமை கவ்விய தனது மீட்டலை இழந்திருந்தாள் யாழ் நங்கை

நண்பன் சொன்னான் நேற்றுத்தான் உருப்படியாயிருந்த சில நூல்களை மீட்டெடுத்து நூலகரிடம் சேர்ப்பித்ததாக

சிறிது சிறிதாக இப்படிச் சேர்த்த நூல்களின் சேகரம் தான் பின்னால் உருப்பெருத்த யாழ் நூலகம் ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரும் யாழ்ப்பாண இராச்சியத்தில் எண்ணிறந்த ஏட்டுச்சுவடிகளின் களஞ்சியமான 'சரஸ்வதி மஹாலு'ம் ஆக்கிரமிப்பாளரின் நெருப்பிற்கு இரையாச்சு நாசச் செயல்களுக்கும் இப்படியொரு தொடர்ச்சி இருக்கவே செய்கிறது ஆனாலும் நெருப்பையும் விழுங்கி வளரும் அறிவுச்சுடர் ஏற்றுவதில்தான் நல் ஆரோக்கியமே விளைகிறது.

எந்தக் குழியில் இட்டாலும் எரிவிறகின் தீ மேல்நோக்கி வளருவது போலவேதான் அறிவுடைமையும் மேல்நோக்கியே எழுகிறது.

தேசத்தின் மாசை அகற்றுகிற அறிவே எழுக தீயின் நிமிர்வொடும் ஒளிர்வோடும், தூங்குகிற யாழின் நரம்புகளை அறிவுற மீட்டுக.
அறிவுத்தீ வளர்ப்போம்.
பகைத்தீயில் பண்பாடுகள் அழிந்தது போதும்.

27.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதையும் வெல்லும் பேரறிவு

வீட்டுச்சூழல் சின்ன வயசிலேயே என்னை வாசகனாக்கியது.

கல்கி, குமுதம், விகடன், ஈழத்துத் தமிழின்பம் எல்லாமும் வாசிப்பேன்

சுதந்திரனில் வரும் கவிதைப் பூங்காவில் கொய்த பூக்களை கோப்புகளில் பத்திரப்படுத்து வேன்.

இந்த வாசிப்புப் பழக்கம்
இளந்தாரி வயசிலேயே என்னையொரு
வீட்டு நூலகத்திற்கு சொந்தக்காரன் ஆக்கியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமகிருஷ்ணர், விவேகானந்தர், அரவிந்தர்
எல்லோரும் இங்கே ஒன்றாய்க் குடி கொண்டார்கள்
புதுமைப்பித்தன், ஜானகிராமன், ஜெயகாந்தன்,
பொன்னுத்துரை, சிவத்தம்பி, தளையசிங்கம்
எல்லாரும் கூடியிருந்து குலவிக் கதைத்தார்கள்.
மாணவ நண்பர்கள் கூடிப்படிப்பதற்கென்றே
ஊரில் ஒரு விடுதியை உருவாக்கியபோதில்
எனது வீட்டு நூலகமும் அங்கு விடுதிகொண்டது
பதிவேட்டில் குறித்துக் கொண்டு பல்வேறு
நண்பருக்கும்
படிக்கக் கொடுத்தவற்றில் திரும்பி வந்தவை
சிலவே தான்
ஆனாலும் புத்தகங்கள் வாங்குவதை நான்
நிறுத்தியதில்லை.

திரும்பவும் நிரம்பவும் புத்தகங்கள் சேர்ந்தன
இன்று தேடியும் பெறமுடியாத சேகரங்கள்,
எனது சிறிய முயற்சியில் பதிப்புகள் கண்ட
நூல்களின் பலநூறு பிரதிகள்,
இந்திய ராணுவம் மூட்டிய தீயில் எரிந்து போயின.

எனினும் திருமலைக்கு இடம்பெயர்வு
இன்னொரு பயணம் திரும்பிப்போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் விட்டிற்று வந்த புத்தகங்களை
மீட்டு வரலாமென்ற நம்பிக்கை பொய்த்தது
பொய்யாகிப்போன சமாதானம் போல.

யுத்தம் தொடங்கியது
மீளவும் நூல்களின் சேகரம் இழந்தேன்
பன்னிரு ஆழ்வார்களின் பாசுரங்களை
இழந்ததுவும் குழந்தைகள் கலைக் களஞ்சிய
தொகுதிகளை இழந்ததுவும் தான்
என்னைப்பாடாய்படுத்தியது ஆனாலும்
புத்தகங்கள் சேகரிப்பதை நான்விட்டதில்லை.

மீண்டும் எனது புத்தகங்களுக்கு வந்தது ஓர் விபத்து

சுனாமி வந்ததும் ஊமையாய்க் கிடந்த
உவர்மலையின் ஓடைக்கடல் ஆயிரம்
கொடுநாவுகள் வளைத்து வீசி கொண்டு போனது
புத்தகங்களை எஞ்சிய புத்தகங்களில் இன்னும்
அந்தச் சுனாமிநாற்றம் எதையோ எச்சரிக்கை
செய்தபடி ஆனாலும் என்ன இன்னமும்
புத்தகங்கள் அலுமாரிகளில் நிறைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ தின்னும் தான்
பெயர்வு பிடுங்கும் தான்
கடலும் காவுகொள்ளும் தான்
எனினும் புத்தகங்களால் நான் பெற்ற புத்தறிவை,
பூத்து விரிந்தபடி புதிது தேடுகின்ற காதலினை,
எந்தத் தீ தான் தின்றுவிடும்
எந்தப் பெயர்வுதான் பிடுங்கிச்செல்லும்
எந்தக் கடல்தான் காவுகொள்ளும்
இனியும் நான் எடுப்பேன் வராக அவதாரம்
மண்ணைக்கிண்டி மறுபடியும் வேதம்
புதிது கொணர்வேன்
இன்னுமொரு நாகரீக எழுச்சிக்கு வித்தாக.

28.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பெனும் வளர்கலை

நீர்மேல் எழுத்துகளை வாசித்திருக்கிறீர்களா?
நான் வாசித்திருக்கிறேன்
ஆற்றின் அடிமன ஓட்டத்தில்
ஒளி எழுதும் பொன் எழுத்துகளை
புகுந்து நீராடியவாறே வாசித்திருக்கிறேன்
நீங்கள் வாசித்திருக்கிறீர்களா?
எப்போதும் எங்கள் கடல் இசைக்கும் தாலாட்டில்
என் தாய் எழுதிய அன்பின் வரிவடிவங்களை
வாசித்திருக்கிறேன்
நீங்கள் வாசித்திருக்கிறீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவின் கடலோரத் தொட்டிலிலே
ஓர் சின்னக் கவிஞன் பிறந்ததையும்
சின்ன நடைநடந்து செல்ல மழலை
பொழிந்ததையும்
சாமிப்பெரியப்பாவின் தாடியை வருடிவிட்டவாறு
அவரோடு தேவாரம் பாடியதையும்
சிற்றில்கள் கட்டி விளையாட கடலலைகளை
சீண்டியழித்துச் சிதைத்தாட கடல் நீரை
சினந்து சிறுகைகளால் விசிறி எறிந்ததையும்
கண்ணுறங்காப் பொழுதெல்லாம் நான்
வாசிக்கிறேன் நீங்கள் வாசிக்கிறீர்களா?

அது எனது பள்ளிக்கூடக் காலம்
இரவின் கரும்பலகையிலே நிலவின் பிறையும்
சுட்டும் விழிச்சுடர்களும்
கண்முழித்து முழித்து எழுதியதை
இன்றும் என் நெஞ்சில் ஒளி வரிகளாய்
வாசிக்கிறேன் பள்ளிக்கூட வாசல்
படிக்கட்டுகளில் குந்தியிருந்து
மறுபடியும் மறுபடியும் சிலேற்றில் இட்ட வட்ட
விளிம்புகளில் எதையெதையோவெல்லாம்
வாசிக்கிறேன்
நீங்கள் வாசிக்கிறீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை எம்மில் எழுதியதை
இயற்கையோடு நாம் இசைவுற்று எழுதியதை
கலவைசெய்து இயற்றும் மொழிதான் எங்கள்
கவிதை அதன் மெய்வண்ணத்தழகை
நீங்களேன் வாசிப்பதில்லை.
ஊரை, உறவை, உலகை உலவித்திரிந்து
கொணர்ந்த அழகெல்லாம் கோலமிட்டுக்
காட்டுகிறோம்
என்னே மனிதர் நீர்
மகிழ்வித்த கோலத்தின் மணம் முகரமாட்டீர்
ஈன எழுத்துகளின் பின்னால் இழுபடுவீர்
காசு, பணம், ஊனமனம், கலாசாரச் சீரழிவு
தருவதன்றி
ஈன எழுத்துகளால் ஆருயிர்கள் மீதான
காதலை எழுதுதல் கூடுமா?

வானகத்து விரிவை ஒளியின் வியாபகத்தை
பூமியிலே குடியேற்ற புதிது படைப்பவர் நாம்
"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில்"
சேர்க்கும் வாசிப்பை ஒரு கலாயோகமாய்
வளர்த்தெடுங்கள்
அப்போது புரியும் படைப்பின் ஆன்மா.

28.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக வாசிப்பு

வாசிப்பதற்கு உள்மன ஏட்டில் பல பக்கங்கள் உள்ளன.
புரட்டப் புரட்ட விரிந்து கொண்டே வரும் ஆதிவரி வடிவங்கள், அதற்கும் முந்திய சித்திர எழுத்துகள், கோடுகள், குறியீடுகள், எல்லா வடிவங்களிலும் எமது மனவோட்டத்தை வாசிக்கலாம் ஆதி மனவோட்டத்திலிருந்து சமகால ஓட்டம் வரையிலும்
சுனாமி வந்து புரட்டி எறிய சுக்கல் சுக்கலாகிய கரையோர வாழ்வின் கனவுக் கிழிசல்களை வாசித்ததைப் போல, நீர் வற்றி வெளித்தெரிய வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக் கல்வெட்டுகளையும், அமிழ்ந்துபோய் வெளியுமிழப்பட்ட நாகரீகங்களையும் வாசித்தமை போல, எமது மனசின் மேற்பரப்பையும் ஊடுருவி ஆழ்மன ரகசியச் சுரங்கங்களையும் வாசிக்கலாம்.

மனம் என்பது தனிமனம் அல்ல: அதுவோர் கூட்டுமனம், பலப்பல பண்பாடுகளை முகர்ந்தும், நுகர்ந்தும், பேணிவைக்கும் கூட்டுமனம்.
ஆதிக்குழுமக் கலாசாரங்களின் அடிமம் அதனுள் தொல் படிவங்களாய் பதிந்திருக்கும்.
மனதின் மேல் பரப்பும் தாண்டி
நன்முத்துக்குளிக்கும் முயல்வுகள்
எமக்கிருந்தால்,
கனவு லோகங்களையும் தாண்டிப்
பயணிக்கலாம்.
'உள் மனயாத்திரைப்' பயணிகள்
ஆழ்சுழியோடிகளாய் நெற்றியில் மாய்ச்சொளி
பூட்டி தேடுதல் போல உள்ளொளிப் பாய்வின்
வெளிச்சப் பாவலில் தேடல் வேண்டும்.

மனசின் நவநவப்புது வாதுக்களையும் தாண்டி
ஆழ நெடுந்திரைக்கடல் ஒரு எக்கு எக்கி
வற்றடித்தாற்போல மனசின் ஆதிப்பொதும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பை நிகழ்த்தலாம். தேடிப் படிக்கத் திரட்ட,
உள்ளகத்தில் எவ்வளவோ உண்டு.
மூடிய ஆயிரம் இதழ்கள் அவிழ்ந்து இனிய
அமிழ்தம் சொரிவதை நுகர மனசின்
தாழ்ப்பாய்களைத்
திறந்து வாசித்தபடியே செல்வோமாக
கடல்கொண்ட கபாடபுரத்திற்கும் அப்பால்.

28.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் காவுகை

பண்பாடு என்பது ஒரு காவுகை.
கொண்டும் கொடுத்தும் நிகழ்வது.
குடிகுடியாய், காவிச் செல்லப்படுவது.
நாடு கடந்தும், மொழி கடந்தும்,
இனக்குழுமங்கள் கடந்தும்
இக்காவுகை நிகழும்.

வாய்மொழி மரபின் ஊடாக நிகழ்ந்த காவுகை
ஏடுகள் மூலம் பின்னர் பேணப்பட்டது
எழுத்தறிவு யுகமாகிய இன்று அச்சு
ஊடகங்களின் மூலம் அனைவர்க்குமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்களஞ்சியங்களின்
திறவுகோல் அனைவரிடத்தும்.
பூட்டிவைத்திருந்த கதவுகள் திறந்து கொண்டன.
இரும்புத் தாழ்ப்பாள்கள் உடைபட்டுத் திறந்தன.
எல்லா வாசல்களின் ஊடாகவும்
எல்லாப் பண்பாடுகளினதும் காவுகை.

காவடி தூக்கி ஆடுவதும், பாடுவதும் தான் கலாசாரம் என்பது போய் புதுக்கதவுகள் திறந்தன : புதுப்புதுக் கருத்துகளின் உள்நுழைவுகள் நிகழ் கின்றன. வெவ்வேறே வந்த அறிவின் மோதுகை புதிய கருத்துகளின் தோற்றுவாயாகியது. மனித அறிவு வளர்ச்சி துரிதப்பட்டது. எல்லாப் பண்பாடு களினதும் அறிவுகளினதும் சாரம் பருகிய மனிதன் புதிய கூர்ப்பு யுகத்தின் வாசலில் நிற்கிறான். எந்நேரமும் புதிய பாய்ச்சல் நிகழலாம்.

இனியில்லை இறுகிய கோட்பாடுகளின்
கோஷங்கள்
இனியில்லை அதிகார நாற்காலி வழிபாடுகள்
பேரறிவிற்கு வேலியிட்டு யாரும் தடுக்க முடியாது
வேலிகள் தாண்டப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரறிவு பெற்றவர்கள் அண்டவெளி
மனிதரோடும் பேருறவு கொள்ளுவர்
கோளமயமாதலல்ல அல்ல
பேரறிவு மயமாகும் பெரும்காவுகை நிகழலாம்.

29.09.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியது மீட்டல்

"வாசியுங்கள் எனவொரு யாழினை வைக்கத் தந்தி அதிர்ந்தது போலவும்" என்கிறார் கவிஞர் மகாகவி ஓரிடத்தில் "நாயனத்துப் பண்ணு ருண்டு வந்து பரவசமே செய்கிறது" என்கிறார் இன்னோரிடத்தில்.

அதிர்வும், பரவசமும் நுண்ணுணர்வில் நிகழ்வன. ஒன்றன் மீதான அனுபவ அதிர்வு அல்லது அதிர்வு அனுபவம், பின்னர், தொடர் மீட்டலாகி, மீட்டலின் சாதகமாய் விளைவது பரவசம் என்கிற முழு மெய்யனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அதிர்வும், பரவசமும் படைப்பாளிக்கு நேர்வது போல் வாசகனுக்கும் நேரும்போது படைப்பாளி - வாசகன் என்கின்ற இடைவெளி அகல்கிறது. எழுத்து - வாசிப்பு என்கின்ற வேறு வேறுகள் அனுபவம் என்னும் பொதுவெளியில் சங்கமிக்கின்றன. வாசிப்பு, படைப்பனுபவத்திற்குள் நுழைவு நிகழ்த்துகிறது. வாசகன் படைப்பாளியாக உயர்கின்றான்.

எழுத்தின் பயன் இதுதான். வாசக மனதைத் தரம் உயர்த்துவது. வாசிப்பின் பயனும் இதுதான். படைப்பாளியின் பரவச நிலைக்குள் தன்னை பதியனிடுவது.

எழுத்தும் கலையும் இந்த இடைவெளியை
கடப்பதற்குத் தான்.
மனத்தன இடைவெளிகளை கடப்பதற்கு,
சமூகத்தள இடைவெளிகளை கடப்பதற்கு,
எல்லோரும் உயர்நிலை எய்துவதற்கு
மனித சமூகத்தின் மனச்சூழல் பெற்றெடுத்த
தத்துப் பிள்ளைகளாக
எழுத்தும் கலையும் இயங்காமல்,
சுற்றுச் சூழலின் ஆன்மாவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல உயிர்வாழ்வனவற்றின் நற்றாயும்,
செவிலியும் ஆகவிருந்தால்
இடைவெளிகளைக் கடத்தல் சத்தியம்.

ஒவ்வோர் நுண்ணுயிரிகளினதும் நுண்ணியமாய்,
பல்லுயிரிகளினதும் பவ்வியமாய்,
எல்லாவற்றினுள்ளும்
நுண்ணுணர்வின் நரம்புகளால்
பிணைக்கப்பட்டுள்ள நூதன ஆன்மாவாய்,
தன்னை வாசிக்கும் தகைமை இருந்தால்,
எல்லாவற்றிலும் தன்னை மீட்டலாம் :
தன்னில் எல்லாவற்றையும் மீட்டலாம்
எல்லாமும் படைப்பின் இன்பகர
மீட்டல் ஆவதுதான்
வாசிப்புப் பண்பாட்டின் இனிய இலக்கு ஆகும்
அதை எய்துவோமாக.

30.09.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உள்நுழைவு

வாசல் ஒன்றில் நிற்கிறேன்
நல்வரவு என்ற வாசகம் பொறித்த
கால்மிதி வரவேற்பு: எழுத்தை ஏறி மிதித்தபடி
எப்படி உட்செல்லுவது?
இளமையிலிருந்து எழுத்துகளை மிதித்தறியா
மரியாதை வழக்கம் சங்கடப்படுகிறது.

நாம் எத்தகைய பண்பாட்டு வாசலில் நிற்கிறோம்?
எழுத்துகளை இழிவு செய்யும் மடமை
எமக்கு எங்கிருந்து தொற்றியது?
எழுத்தறியாத என் தாய் எனக்குப் பழக்கியிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனிந்த எழுத்தறிவு யுகத்தில் உழக்குப்படுகிறது?
பேணும் கலாசாரம் போய் வீசும் கலாசாரம்
விழுமியங்களையும் தூரத்துக் குப்பை மேட்டில்
ஏன் கொட்டிவிட்டது?

இளவயசிலிருந்தே எனக்குரிய பழக்கமாயிருந்தது
எழுத்துக்குத் தருகின்ற மரியாதை தான்,
எந்த மொழியின் நாளிதழாயினும்
கீழே போட்டு உட்கார மாட்டேன்
விழுந்த புத்தகத்தை கண்களில் ஒற்றி
விட்டுத்தான்
உரிய இடத்தில் வைப்பேன்.
இந்த உரிய இடங்கள் இன்று ஏன் சரிவு கண்டன?
புனித நூல்களை விரித்து வைத்துப் பாராயணம்
பண்ணவெனப்பேணிய 'படியம்'
இன்று எமது கோயில்களில் ஏன்
காணாமல் போய் விட்டது?

இன்றைக்கும் திருக்குரான் ஓதும் முறையில்
இந்த மரியாதை படியம் போட்டிருப்பதைக்
காண்கிறோமே! எழுத்தறிவுக்கும்,
எழுத்தாணிக்கலைக்கும் இருக்கும் பிரிக்க முடியாத
பேணுகை மரபின் அழகு இன்றும் தொடர்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நண்பன் ஒருவனின் இல்லம் சென்றிருந்தேன் நபிகள் நாயகம் சொல்ல அவர் சீடர் கைப்பட எழுதிய கடித வாசகங்களின் மெய்ப்படம் சுவரில் மாட்டிவைக்கப்பட்டிருந்த அழகிற்கு முன்னால் நான் மனதால் மண்டியிட்டேன்.

நூல்களை எப்படி அழகுறப் பேணுவது என்பதை அவனது வீட்டு நூலகம் எனக்குப் போதித்த போதில் என்றோ நான் கவனமின்றித் தொலைத்துவிட்ட திருக்குரான் பிரதி என்னுள் திறந்து கொண்டது:

அறிவைத் தேடும் ஆராத காதலை அழுத்திச் சொன்ன நபிகள் இத்தனைக்கும் கல்வியறிவே அற்ற ஒருவராம். கனக்கப் படித்த. மேதாவித்தனம் வல்லவராய். காட்டி கொள்ளுபவர் நாம். நூல் வழிவந்த நுண்ணறிவை எல்லாவற்றிலும் நுழைத்து. புதியன கண்டறியும் ஆய்வு நோக்கு ஏன் அற்றுப்போனது?

எம்மிடம் நல்ல பண்பாட்டின் நுண்ணுயிர் மையைப் பேணுதல் இல்லை. அறிவெனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரக்ஞையை, அனைத்துச் சடப்பொருள்களுக்கும் உணர்வு சார்ந்த உறவாய்ப் பிணைத்து, சக உணர்வுத் தொடுகையாய் வளர்க்க நாம் முனைவ தில்லை. பெரிய துறவிகள் போல இவ்வுலக வாழ்வை சதமென்று வீசி எறியும் குணாம்சம் எம்முள் ஒரு போலித்தனத்தை வளர்த்து விட்டது.

வீசி எறியவா உடல் எடுத்தோம்?
பொய்யென்று உதறவா புலநெறி
வாழ்வு தொடங்கினோம்?
வாழ்வும் ஓர் அழகிய கற்கை நெறிதான் என்பதை
ஏன் மறந்தோம்? மெய்யெனப்படுவது ஒன்று
உண்டென்றால் அதை அவ்வுலக வாழ்விலே
ஒளியுற நிறுவுதல் அல்லவா சிறந்தது?
ஆதலால் அன்பரீர் அறிவு தருகின்ற
கருவிகளைப் போற்றுவோம்:
வீடுகளை அறிவின் நிலையங்களாக்குவோம்
அறிவுலகப் பண்பாடுகளைத்
தேடியறிந்து கொள்ளுவோம்
வாழ்வை அறிவொளிரும் அழகிய வீடாக்குவோம்.
புலன்களை வேண்டியவாறு சமூக
வேலையில் நீட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு வழங்குவது நல்லறிவாயிருந்தால் அது ஒவ்வோர் அகங்களிலும் அறிவிளக்கேற்றட்டும் பேரறிவின் பீடமாக ஒவ்வோர் மனங்களும் மாறட்டும். பேணும் பண்பாடு என்பது பேரறிவை எங்கும் எவர்க்கும் வழங்கும் களஞ்சியமாகட்டும்

கவனியுங்கள் இப்போது நாம் நின்று
கொண்டிருப்பது
பேரறிவின் பண்பாட்டுத்தோரண நுழைவாயிலில்
ஒரு புதிய யுகத்தின் ஒளி கீற்றுகள்
உள்நுழைகின்றன
எந்தச் சங்கடமும் இடர்களும் எமக்கில்லை
நாம் பூரணர் : புத்துலகின் நிறைந்த
கொள்வனவுடன்
நன்நடை பயில்கின்றோம் என்க.

01.10.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம் காட்டி

முதன் முதலாக ஒரு புத்தகம் வாங்கி வந்தேன். மேசை லாச்சியுள் அதனைப் பக்குவமாய் வைத்தேன். வைப்பதும் எடுப்பதுமாய் வடிவு பார்த்து வாசம் உறிஞ்சி முகர்ந்து பின்னர் மீளவும் மேசைலாச்சியுள் வைப்பேன்.

நாளும் அது என்னைப் பரிதாபமாய் பார்ப்பது போலிருந்தது வாசிக்காமல் வடிவு மட்டும் பார்த்து வைப்பதனால் கோவம் போலும் என்றெண்ணி வாசிக்கத் தொடங்கினேன். ஒவ்வோர் தடவையும் ஒற்றையைப் புரட்டுகையில் ஓசையெழுப்பி அது தன்னுடைய ஆசையைப் வெளிப்படுத்தியது. வாசித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து முத்தமிட்டு அதனை மூடி வைத்தேன் மேசையில் மேல். போகும் போதும் வரும்போதும் அது மீளவும் தனது பரிதாபப் பார்வையை என் மேல் வீசியது. தனக்கொரு துணையில்லையே என்ற ஏக்கத்தின் வெளிப்பாடோவென்று இன்னொரு புத்தகம் வாங்கி வந்தேன். முதல் நூலுக்கு ஒரு துணை நூல்.

முதல் நூல், துணை நூலோடு, கவிதை மொழியில் வார்த்தையாடத் தொடங்கியது. துணை நூலோ தான் இப்படிப் பலரோடும் புத்தகக்கடையில் கூடியிருந்த காலக் கதைகளைச் சொன்னது. இரண்டும் காற்றில் இதழ் விரியக் கலந்தன. கூடிக் குலவின. முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சுகள் பொரித்தன. புத்தகக் குஞ்சுகள்.

இட்டதுவோ இரண்டு முட்டை
பொரிச்சதுவோ நூறு குஞ்சு

நூறு குஞ்சும் வீட்டு நூலகத்திலே கூடி
புத்தக சமூகம் ஒன்றையே உற்பவித்தன.

என்ன சமூகம்? பல் சமூகம்
எந்த இனம்? பல்லினம்
என்ன கலாசாரம்? பல கலாசாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லினமும், பல் சமூகங்களும், பல் கலாசாரமும்
கூட்டுக் குடித்தனம் செய்யத் தொடங்கின.
கூட்டுக் குடித்தனம் தான் ஆனாலும்
குஞ்சுகள் கூடியழைத்து வாழ விரும்பும்
உலகம் ஒன்று தானென விளம்பின
என்ன உலகம்?, புத்துலகம்?
புத்துலகமா? புத்தக உலகமா?
புதிய அகம் பூக்கும் உலகம்!
புத்தறிவு பூக்கும் உலகம்!
புத்தறிவு பூக்குமா? புது உலகம் தோன்றுமா?
புத்தகப் பூச்சிகள் ஆகிவிடாமல்
புதிய சிந்தனைப் பாய்ச்சல் நிகழ்த்த
அர்ப்பணிப்போடு செயற்பட்டால்
புத்துலகம் கைவசம் தான்!
புத்தறிவுச் சீவிகளே! புத்தறிவுச் சீவிகளே!
ஆள்காட்டி சொன்னது இப்படி
ஆள்காட்டியா? அல்ல புதிய அகம் காட்டி!
மேலும் சொன்னது
புத்தறிவு பூப்பதும் புது உலகு சமைவதும்
உங்கள் அகங்கூர்தலைப் பொறுத்தது ;
அகங்கூர்தலைப் பொறுத்தது.

01.10.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் கலையும் யோகமாக

"வாசியோகம் தேரேன்றான் எங்கள் குரு நாதன்" என்கிறார் யோகர் சுவாமிகள். சுவாசப் பயிற்சிகள் ஊடாக நிகழ்த்தப்படும் குண்டலினி யோகம் வாசியோகம் எனப்படும். "மூலாதாரத்து மூண்டெழு கனலை காலால் (காற்றால்) எழுப்பும் கருத்து" என்கிற ஔவையின் விநாயகர் அகவல் பாட்டின் வரிகள் சொல்லுவதும் இந்த வாசி யோகத்தையே தான். அதுவே குண்டலினி யோகமுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பும் ஒரு யோகமாகும். இதை வாசிப்பு யோகம் என்றழைக்கலாம். வாசிப்பு, ஆன்மீகத் தேடல்காரருக்கு ஒரு சத்சங்கம் தருகின்ற பயனைப் போல உதவுகின்ற, ஒரு சத்யோகம் தான், நல்ல ஆன்மீக நூல்களைத் தேர்வு செய்து வாசிப்பதும் தனியே முயல்கின்ற ஆன்மீகத் தேடலுக்கு துணையாக நின்று உதவும்.

இன்றைய அறிவுத் துறையினரும், பண்பாட்டுத் துறையினரும், கலை இலக்கியப் படைப்பாளிகளும், அனைத்துத் துறைசார்ந்த நல்ல நூல்களைத் தேர்வு செய்து வாசிப்புச் செய்தல் என்பதும் அவரவர் துறைகளுக்கு துணை செய்யும் யோகம் தான்.

யோகம் என்பது கலை : யோகக் கலை
கலை என்பதும் யோகமே : கலாயோகம்.
உள்ளாழ்ந்த ஈடுபாடும் அர்ப்பணிப்பும் எந்தத் துறையில் செலுத்தப்பட்டாலும் அந்தத் துறை யினருக்கு மேதைமையை ஒளிரச் செய்யும் யோகம். எங்கெங்கு மேதைமை ஒளிர்கின்றதோ அங்கங்கு உண்மை ஒளி விடுகின்றது என்றே பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய யுகம் அறிவு யுகம் :

அறிவு யுகத்திற்கான யோகிகள் யார்?

அறிவுத் துறைசார்ந்த, கலைத்துறை சார்ந்த சகலரும் அவ்வத் துறைசார் யோகியரே தான். சிறந்த துறைசார் நூல்களை வாசிப்புச் செய்து தமது திறனில் உரைசிப் பார்த்து, தகைமையுடைய வற்றைத் தாமும் வெளியீடு செய்யும் போது அறிவுலக யோகத்திற்கு உதவுபவர்களே ஆவர். அவர்கள் அறிவு யோகிகள், கலை சார்ந்த படைப்புகள், திறனாய்வுகள் செய்தளிப்போர் கலாயோகிகள், அறிவும் கலையும் இணைந்த பார்வையைக் கொண்டிருப்போர் அறிவுக்கலா யோகியர். அவர்கள் புதிய இனம் ஒன்றின் தோற்றுவாய் ஆகுவர். அந்தப் புதிய இனம்தான் புதுமனிதம் என்போம்.

01.10.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை நடை நடந்து

ஃஏற்புடைய இடங்களில் எல்லாம் அவனவன் தனது பார்வையைத் தான் வாசிப்புச் செய்கின்றான். தான் பார்த்தது, தான் கண்டது, என்ற தன்னனுபவமே கவிதை வாசிப்பாகிறது.

படைப்பாளி தன் பார்வையைப் பதிவு செய்கிற போது வாசகன் காண்பது தனது பார்வையைத்தான். படைப்பாளியின் பார்வைக்கு நேரெதிர் வாசிப்பாகவும் அது அமையலாம். பலகோணப் பார்வைக்கும் இடமளிப்பதுதான் சிறந்த படைப்பு :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதாவரி நதியின் தண்ணென்ற ஓட்டத்தில் வீரர்கள், சங்கத்துச் சான்றோர் கவியின் தண்ணென்ற ஒழுக்கத்தைக் கண்டதாகக் கம்பன் காட்டுகிறான். கம்பன் தனது வாசிப்பை வீரர்கள் பார்வையில் ஏற்றுகிறான். வீரயுகத்தின் ஒழுகலாறை விளம்பும் சங்கத்துச் சான்றோர் கவியை, இராமாயண காலத்து வீரயுகத்தவர்கள் கண்ட தாகக் காட்டுவது பொருத்தம்தானே. வீரர்கள் கண்ட கோதாவரி, வீரயுகத்தின் ஒழுகலாறு, கம்பன் எனும் கவிஞன் கண்டது கவிதையின் ஒழுகலாறு.

"நடந்தாய் வாழி காவேரி" யென்று காவேரியைப் பாடினார் இளங்கோவடிகள். இளங்கோ கண்ட காவேரி நடந்த நடை என்ன நடை? நிச்சயமாக போற்றா ஒழுக்கம் புரிந்த நடையல்ல.

"மங்கை மாதர் பெருங்கற்பென்ற வளமையைப் போற்றி பாடி நடந்த பொய்யா இளநடை. வான் பொய்த்தாலும் தான் பொய்யா வற்றா இளநடை"
இதே காவேரியை கண்ணதாசன் பாடும்போது
"காவிரித்தாயே காவிரித் தாயே
காதலர் விளையாடப் பூவிரித் தாயே" என்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிரி நீர் விரித்ததாகச் சொல்வதில் அழகில்லை.
காவிரிந்த பரப்பெல்லாம் அளைந்து வந்ததால்
அது பூவிரிக்கிறது என்பதே அழகு
இந்த அழகு யாருக்காக?
காதலர் நீர் விளையாடுவதற்காக

'யாரந்தக் காதலர்?' இப்படிக் கேட்ட உடனேயே எங்கள் நினைவு சிலப்பதிகார காலத்தில் காவிரியில் நீர் விளையாடிய காதலர்களிடத்திற்குச் சென்று விடுகிறது. நதியின் நடையும், கவியின் நடையும், காதலாகி ஒன்று கலக்கும் இந்த ஓட்டம் தமிழின் சிறந்த கவிதைப் பெறுமான ஓட்டம்.

"கம்பன் விருத்தக் கவிதை நடைநடந்து
செம்பு சுமந்த இடையாரும் தோற்கவரும்
ஐந்து ரதங்கள் அழகான காட்சியடி"

யாழ்ப்பாணத்தின் கோயில் திருவிழாக்களின் போது தேர்களின் ஊர்வல நடையை மகாகவி மேற்கண்டவாறு பாடுகிறான். நதியின் நடையில் மட்டுமல்ல தேரின் நடையிலும் கவிதையின் நடையை மகாகவி கண்டு காட்டுகிறான். கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையோடு செம்பு சுமந்த இடையாரின் நடையும் இணை சேரும் இந்தக் கவிதைகளின் நடையழகையெல்லாம் நாம் வாசிக்கும்போது தமிழின் மரபார்ந்த கவிதை வளமே நம்முள் நடை பயில்கிறது. பழசையும் புதிசையும் இணைசேர வாசியுங்கள் எமது இரசனை புதிய வளம் பெறும்.

01.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிசம் அல்லது முதும்மொழி

ஊரின் ஒரு முதியவர் அல்லது ஒரு மூதாட்டி இறந்து விட்டால் ஒரு கிழம் பட்டது என்கிறோம்.

உண்மையில் ஒரு முதுமை போய்விட்டது என்றால் ஒரு மூதறிவுக் களஞ்சியம் இறந்துவிட்டது என்பதே பொருள். எமது பண்பாட்டு முதிசத்தின் உரிமைக் கிழவோர் அவர்கள். மூதறிவு, முதுபண்பாடுகள், பாரம்பரிய தொழிற்திறன்கள், நாட்டார் கலை மரபு, நாட்டார் கவிமரவு, கதைமரபு எல்லாமும் எங்கள் மூத்தோர் இறந்துவிட்டால் இறந்தே போவன. இவற்றையெல்லாம் அவர்களிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்து நாம் கற்றறிந்தோமா? வெற்றிலை நரம்புகளிடமிளிரும் பச்சையப் பதிவாய் அவர்களது மன ரேகைகளின் பதிவுகளை உய்த்தறிந்தோமா? வாய்மொழி மரபின் வளத்தை அவர்களிடமிருந்து வாசிப்புச் செய்யாத நாம் வறியர் : பண்பாட்டு வறுமை உடையோர்

போயிற்றொரு வெறுங்கூடு என்கிறோம். அப்படியல்ல. முதுபண்பாட்டின் தேறல் அடங்கிய தேன் கூடுகள் தான் போயின. அவர்கள் பட்டறிவுக் களஞ்சியங்கள். அவற்றின் வளம் நாடி, பண்பாட்டு ஊட்டம் பெற்றிராத எமது அறிவு ஊட்டாட்டாத்தில் தான் எங்கோ ஊனம் விழுந்திருப்பதை பின்னர் தான் கண்டறிவோம். அப்போது எங்களைத் தான் பண்பாட்டின் இரத்தோட்டம் பெற்றிராத வெறுங் கூடுகளென நாம் உணர்வோம். அவர்களின் கற்றறிவு, பெற்றறிவு, பட்டறிவு, பண்பாட்டு மூதறிவு, கண்டறிவு, கேட்டறிவு இவற்றையெல்லாம் வாசிப்புச் செய்யாத நாம் கலாசாரவறியர்.

அவர்கள் எம் மண்ணில் காலாதிகால ஏர் கொண்டு எழுதிய வாழ்வை வாசித்தறியாத நான் எனது தாய் மொழிந்த தாலாட்டை எப்படிப் பாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவேன்? ஆக்காத்திப் பாட்டில் அவள் புனைந்திழைத்த தன் மொழி வாசகங்களை எப்படி இனங் காணுவேன்? என் தந்தையின் உழவு திறன் வல்ல ஒவ்வோர் நடையையும் எனது கால நடை வரம்புகளில் எப்படி நடந்து காட்டுவேன்?
எனது தாயாதிகள் மறைந்தனர்:
போரினால் புலம் பெயர்ந்து போயினர்
அவர்களின் இதரத்தோட்ட மொழியில் அமைந்த உறுதி வாசிப்பை எப்படி நிகழ்த்துவேன்?

எல்லாம் போய்விட்டதென்று புலம்பாமல் எஞ்சியிருக்கும் எமது முதிசங்களின் படிமங்களை இனியேனும் காலம் தாழ்த்தாது வாசித்தறிவோம். அவைதான் எமது பயன்பாட்டின் கல்வெட்டு மொழிகள் : முதும் மொழிகள்.

02.10.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யறிவு

"எனக்குக் கவிதைகள் பிடிக்கும் சிறுகதை பிடிக்காது இது ஒரு வாசகன்"

'நாவல் வாசிப்பேன், கட்டுரைகள் அறவே பிடிக்காது' இதுவொரு வாசகி.

'விஞ்ஞான நூல்களா? வேண்டவே வேண்டாம்' இது இன்னுமோர் அறிவியற் குறுக்கம்.

'பண்பாட்டு மானுடவியலா? மண்டையைக் குழப்பாதீர் மனிசன் ஏற்கனவே குழம்பிப் போயிருக்கிறான்' இதுவோர் அறிவியற் சலிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களில் இப்படிப் பல பல தற்குறுக்கங்கள் ;
சலிப்புகள்; துறை வேறுபாடுகள் ;
அறிதிறன் அற்ற வாசிப்புகள்
எதையும் தேர்வு செய்யும் உரிமை
வாசகனுக்குண்டு
ஆனால் இதைத்தான் வாசிப்பேன் என்பதொரு
தற்குறுக்க மனப் பழக்க
வழக்கத்தை உடைக்க வேண்டும்.
இலக்கிய வகைமைகள் தமக்குள் இணைவு
அற்றவை அல்ல
கவிதைக்குள் ஒரு சிறுகதை காளான்
குடை பிடித்திருக்கும்.
சிறுகதை நடையில் ஒரு கவிதா ஓட்டம் இருக்கும்
நாவல் கூட ஒரு கையடக்க அரங்கு போலத்தான்
வாசகனின் மனவெளியில் நூற்றாண்டுக்கால
நிகழ்வுகளை நூதன அளிக்கை செய்யும் அரங்கு
விஞ்ஞானம், மானுடவியல் என்பனவெல்லாம்
மானுட சிந்தனை எடுத்த வியாபகங்கள் தான்
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து
அளந்தவை தான்
வானியலும் விண் பௌதிகவியலும்
வாசிப்பு அறிவுக்கு ஒன்றும் எட்டாதவை அல்ல ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தான் எட்டுதற்கு அஞ்சுகின்றோம்
சிந்திக்கும் விலங்கென்று சொல்லப்படும் நாம்
சிந்தனையைத் தூண்டுவனவற்றை ஏன்
மண்டையைக் குழப்பும் விவகாரங்கள் என்கிறோம்?
மழைக்கால மண்டூகம் எழுப்பும் ஒற்றைக் குரலுள்
ஒடுங்கவா வாழ்வெடுத்தோம்?

வாசக, வாழ்வின் மறுபக்கங்களையும்,
மாற்றுப் பக்கங்களையும் பார்:
வாசி : சிந்தி : பாவின் இடையே வருகின்ற
மௌன ஊடாட்டம் போல் சிந்தனைக்கான
மோனநிலைக்கும் இடம் ஒதுக்கு
கிளை நதிகளின் கூடல் வருவது போல்
பல துறைகளின் அறிவே
பல்கிப்பெருகும் முழுமெய்யாகும்
வாசக! மெய்யறிவாளன் எம் இலக்காகட்டும்.

02.10.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வாசகம்

பூமி வாசி சொன்னான் புறவுலக வாசியைப் பார்த்து
'வேற்று கிரகவாசி'
நகர வாசி கிராமத்தானைப் பார்த்துச் சொன்னான்
'நாட்டுப் புறவாசி'
நாட்டுப் புறவாசி பழங்குடியினனைப்
பார்த்துச் சொன்னான்
'காட்டு வாசி'
மனிதனை மனிதன் வாசிப்புச் செய்த போதெல்லாம்
தன்னின் அந்நியமாகவே நோக்கினான்:
அந்நியம் கொள்தல் ; அந்நியம் செய்தல்
இதுவே எமது பண்பாகிப் போயிற்று:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறனில் தன்னை வாசித்தல்
தன்னில் பிறரை வாசித்தலென
மனிதரை அருகருகில் கொணர்ந்து
இணைவாசிப்புச் செய்தல் எவரிடத்தும் இல்லை.

இன்றைய அறிவுயுகத்தின் வளர்ச்சிக்கோட்டில்
வேற்றுக்கிரகங்கள் என்பதும் பிழை
எல்லாமே எமது அண்டை வீடுகள் என்றே
வாசிப்போம்
நகரம் - கிராமம் என்ற எல்லைக்கோடுகள்
கரைந்து
இணைபொருளாதார வளர்ச்சிக்கோட்டில்
ஒரு தாய் பிள்ளைகள் என்றே அறிவோம்
காட்டு வாசி என்ற பழங்குடி மரபினர் தான்
எமது மூத்த பண்பாட்டிற்கு ஊறுசெய்யாத
முதற்குடி மக்களென பண்பாட்டு மானுடவியல்
பார்வையில் நோக்குவோம்.
சுற்றுப்புறச் சூழலும், சூழல் வாழிகளான
மற்றுயிரிகளும்
எம்முள் ஒன்றான, இயல் வாழ்வின் கூறுகளான
சகஜீவிகள் என்போம்.
இப்போது எமக்கு என்ன பெயர் சூட்டலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி அழைக்கலாம்?
எல்லைக்கட்டுகள், தளைகள் நீங்கி விட்டு
விடுதலையாகி நிற்போர் என்பதால்
எம்மை விடுதலை வாசிகள் என்றே அழைப்போம்.
விண்ணின் வெளிகள் அளாவி விரிவு பெற்ற
பிரபஞ்சவாசிகள் என்னும் பெயர் பெறுவோம்.

03.10.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் வாசிப்பு

மீட்டலுக்கான பக்கம் ஏதும் மீந்திருக்கலாம். அந்தப் பக்கம் உங்களுக்கானது. இனி நிகழ்த்தப் போகும் புதிய பயணத்திற்கான மனக்குறிப்புகளை அதில் நீங்கள் எழுதிக் கொள்ளலாம். ஏற்கனவே எழுதப்பட்டவற்றை மறுத்தும் எழுதலாம். எப்போதும் ஒன்றைக் கவனத்தில் கொள்ளுங்கள். வீணையின் தொடுக்கப்பட்ட நரம்புகளில் விரல்கள் இன்னும் மீட்டாத இசைவெளி இருக்கும். தொடுக்கப்படாத நரம்பொன்றிலிருந்து கசியும் மீட்டலிற்கான தருண வெளியாக அது இருக்கலாம். அதைத் திறந்து வைப்பது உங்கள் உணரறிவினைச் சார்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புத்தகம் அல்லது ஓர் அற்புத நிகழ்வின் அனுபவக்கீற்று மனதை கீறித் திறந்தால் அதிலிருந்து தொடங்கும் பயணப் பாதைக்கு தாழ்ப்பாள் இடாதீர்கள். பயணம் நிகழட்டும். பயணப்பாதையில் ஒரு மர நிழலின் கீழ் தங்க நேரிடும் எனக் கருதினால் மேலும் பயணிப்பதற்கான வலுவைத் தூண்டிடும் சிறந்தவாறு நூலை, அல்லது ஒரு வாசிப்புக் கருவியை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். இவற்றைவிடவும் சிறந்தது இயற்கையை வாசித்தபடி செல்வதும், இசைமிழற்றிகளான பறவைகளின் பயண வழிப் பாடல்களைப் பகிர்ந்து கொள்வதும் தான் இவற்றினிடை எங்கிருந்தோவோர் இடையனின் இன் குழல் உங்கள் இதயத்தை இசைத்தலும் கூடும்.

எல்லாமும் எமக்கோர் தேடலைத் தொடங்கி வைக்கவும், தொடர்ந்து நிகழ்த்தவும் தான் அவையே இடைத்தரிக்க வைக்கும் காரணிகள் ஆவதற்கு அல்ல நதியின் தொடரோட்டம்போல் நிகழும் பயணம் ஏதாவதொரு படித்துறையில் தொடங்கினாலும் பயணம் வாழ்வின் கொள்ளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கியா அல்லது தொல்லிடம் நோக்கியா என்ப தொன்றும் பிரச்சினை இல்லை.

வாழ்வின் உள் அழக்குளியல் எமக்குத் தொல்மெய்யுணர்வைத் தூண்டவே செய்யும்.

தூண்டுக ஆயினும் அதனைப் புறத்தளம்
துலக்கிடப் பாய்ச்சுகிறோமா என்பதே முக்கியம்.
வரண்டு கிடக்கும் வாழ்வின் தரிசு நீங்கிட
அறிவு நீர் பாய்ச்சும் ஆற்றலைத் தேடலே
எமது கற்றலாகுக.

எமது அறிவு புதிய சிந்தனை நாட்டத்தை பிறப்பித்தாக வேண்டும் : புத்துருவாக்கச் சிந்தனை கொள்க.

03.10.2005

●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மரங்கள் நாட்டி மண்வளம் காப்போம்
## மண்வளம் பெருக்கி மனிதம் காப்போம்"

ஈரமற்றுப் போனதடா
இந்நிலம்
அட மானுடனே
காதல் செய்

பிறந்ததும்
தவழ்ந்ததும்
மண் தின்று வளர்த்துமாய
இந்த பூமி
சுடலைப் பொழயாகிப் போதல்
உனக்கு சம்மதமா?

நிகழ் காலத்தில் இலங்கை வறட்சியின் எல்லையை
நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.
அதிலும் குறிப்பாக வட பகுதி மக்கள்
குடிநீரைப் பெற்றுக்கொள்ள அடையும் துன்பங்கள்
அனைவரும் அறிவோம்.ஆகவே மரங்கள்
நாட்டி மண்வளம் காப்போம்.
மண்வளம் பெருக்கி, மனிதம் காப்போம்.



நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org